# தென்னிந்திய தமிழ் திருச்சபை - அல்யென்

## CSI Tamil Parish Alain, UAE

# மன்னா..



காலம் நிறைவேறிற்று,
தேவனுடைய ராஜ்ஜியம் சமீபமாயிற்று;
மனந்திரும்பி
சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்

"The time is fulfilled, and the kingdom of God is at hand;
Repent and believe in the Gospel,"
மாற்கு / Mark: 1:15



பொழிவு: 13
ஆகாரம்: 03

March '2021








கிறிஸ்துவுக்குள் அன்பார்ந்த இறைமக்களே!

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் உங்கள் அனைவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள்! ஸ்தோத்திரம்!!

...... ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னை பின்பற்றக்கடவன். மாற்கு 8:34


**"IF ANYONE WOULD COME AFTER ME, LET HIM DENY HIMSELF AND TAKE UP HIS CROSS AND FOLLOW ME. MARK 8:34**

*Lent- லெந்து காலங்கள் (தபசு காலங்கள்)

லெந்து காலங்கல் என்பது: அருளின் காலம், இரக்கத்தின் காலம், மன்னிப்பின் காலம். கடவுளுடன் உடன்படிக்கையை புதுப்பிக்கும் காலம், புதிய வைகளை பெற்றுக்கொள்ளும் காலம்.

*லெந்து காலம் (அ) தபசு காலங்களின் மையம்: சுய வெறுப்பின் காலம், தன்னைத்தான் வெறுத்தல், உபவாசத்தின் காலம் (உப்-வாஷ்-உப்- என்றால் அருகில், வாஷ் என்றால் வசித்தல்) ஆண்டவரின் அருகில் வசித்தல், மேன்மையின் காலம் சிலுவை நமக்கு வாழ்வின் மேன்மையை கொடுத்தது.

எனவே இந்த லெந்து காலங்களின் பொருளுணர்ந்து இந்த நாட்களில் ஆண்டவருக்குள் விசுவாசத்தோடு நிலைத்து வாழ அழைக்கப்படுகின்றோம். இந்த தபசு காலங்களில் நமது திருச்சபையின் வழியாக



நடைபெறும் அனைத்து நிகழ்வுகளிலும் தவறாமல் கலந்துக்கொள்ள அழைக்கப்படுகின்றிர்கள். குறிப்பாக இந்த ஆண்டு தபசு கால 40 நாள் தியானம் காலை 6.00 மணி முதல் 6.30 மணி வரை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது அனைவரும் ஜெபத்துடன் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் நமது திருச்சபையில் நடைபெற்ற வருடாந்திர அறுப்பின் ஸ்தோத்திர பண்டிகை (Harvest Festival) மற்றும் சிறுவர்களுக்கான Champions for Christ என்ற நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அதற்காக உங்களுடன் இணைந்து ஆண்டவரை துதிக்கின்றேன். இந்த நிகழ்வுகளுக்காக ஜெபித்த, உழைத்த, பங்கெடுத்த, உதவிகள் செய்த குறிப்பாக நமது திருச்சபையின் சிறுவர்கள், CBS ஆசிரியர்கள், மற்றும் நமது திருச்சபையின் பொறுப்பாளர்கள், மூப்பர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொடர்ந்து இந்த காலங்களில் நமது விசுவாச வாழ்வில் சோர்ந்து போகாமல் ஆண்டவருக் குள் நிலைத்திருக்கவும், தேசங்களுக்காக, திருச்சபை களுக்காக, ஊழியர்களுக்காக, குறிப்பாக UAE" லுள்ள மக்களுக்காக, அவர்களின் குடும்பங்களுக் காக, பாதுகாப்பிற்காக, வேலை வாய்ப்புகளுக்காக, பொருளாதாரத்திற்காக, நமது திருச்சபையின் குடும்ப ங்களுக்காக, நமது பிள்ளைகளின் கல்விக்காக, அவர்களின் எதிர்காலத்திற்காக ஊக்கமாய் ஜெபிக்க அழைக்கப்படுகின்றோம்.



ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

கிறிஸ்துவின் உன்னத பணியில் உங்கள் ஆயர்......

Rev. S. P Baskar




அன்பானவர்களே... லெந்துகால தியானத்தில் பங்குபெறும் அனைவரும் அந்தந்த நாளுக்குரிய திருமறைப்பகுதிகளை முன்கூட்டியே படிக்குமாறும், அத்துடன் ஒவ்வொரு நாளும் காலை 6:00 மணி முதல் 6:30 மணி வரை தியானம் நடைபெறும் போது, அனைவரும் ஜெபத்துடன் கலந்துக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.




காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்ஜியம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார். - மாற்கு:1:15

**And saying, "The time is fulfilled, and the kingdom of God is at hand; repent and believe in the gospel," -Mark:1:15**

## முன்னுரை:

சிலுவை கிறிஸ்தவர்களின் ஒரு சின்னம் ஆகும். இது பொதுவாக கிறிஸ்தவர்களல்லாதவர்கள் சொல்லுகின்ற உண்மை செய்தியாகும். ஆனால் சிலுவை இயேசு கிறிஸ்துவின் மூலமாக இந்த மண்ணில் ஒரு புனிதச் சின்னமாக முக்கியம் பெற்றது. அதற்கு முன்பதாக இந்த சிலுவை தண்டனைக்கும், குற்றவாளிகளுக்கும் உரிய சின்னமாக இருந்தது. இது ஒரு கொலைக் கருவியாக பயன்படுத்தப்பட்டது. இயேசுவின் மூலமாக மனுக்குலம் புனிதம் பெற கடவுளின் திட்டத்தை இம்மண்ணில் நிறைவேற்ற இயேசு எடுத்துக்கொண்ட பாதை தான் சிலுவைப்பாதையாகும். வருத்தப்பட்டு பாரம் சுமப்பவர்களே! என்னிடத்தில் வாருங்கள் ! என்று சொன்னவர் தாங்கமுடியாத சுமக்க முடியாத சுமையை சுமந்தவறாக சிலுவை நாதராகப் பயணம் செய்தார். அந்து சிலுவை மூலமாக இந்த மண்ணில் வாழும் மனுக்குலத்திற்கு மீட்பின் சின்னமாக, அன்பின் சின்னமாக, தியாகத்தின் சின்னமாக அமைந்தது. இந்த உலகத்தில் வாழும் மக்களுக்கு சிலுவை சிகரமாக காணப்படுகிறது. அப்போஸ்தலர் பவுல் சிலுவையை குறித்து உரிமை கொண்டாடுகிறார், உறவு கொள்கிறார், உயர்த்திக் கூறுகிறார். பவுலடிகளார் கிறிஸ்தவத்திற்கு அடிப்படையே இயேசுவின் உயிர்த்தெழுதல் என்று ஆணித்தரமாக கூறிவிட்டு அதில் சிலுவையே அடிப்படை, ஆணிவேர், அஸ்திபாரம், அங்கீகாரம், அருட்கொடை என பல்வேறு சூழல்களில் எடுத்துக் காண்பிக்கிறார். சிலுவையின்றி சிம்மாசனம் இல்லை உறுதிப்படுத்துகிறார். காரணம் சிலுவை மீட்பிற்கும் புதிய வாழ்வுக்கும் வழிநடத்துகிறது.

## 01 சிலுவை யுக்தி / The Path of the Cross

இயேசு கிறிஸ்து மனுக்குலத்தை புனிதப் படுத்த யுக்தியாக அல்லது வழியாக வலி நிறைந்த சிலுவையை ஏற்றுக்கொண்டார். அந்த பாதையின் செய்தியை சிலுவை செய்தியாக பெற்றுக்

கொள்கிறோம். இது அபூர்வமான செய்தி ( Strange Message) ஏனென்றால் பாடுபடும் தாசனாக மேசியா என்பவர் வருவார் என்ற புரிந்து கொள்ளுதல் மனுக்குலத்தில் காணப்பட்டது. இதனையே ஏசாயா: 53:1-3 வாக்கியங்களில் எடுத்துரைக்கிறார். இங்கு பாடுபடும் தாசன் தன்னுடைய பாடுகளை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறார். அவரது வாழ்க்கை பாடுகளின் பாதையாக வெளிப்படுத்தப்படுகிறது. இதனையே இயேசு கிறிஸ்து மனுக்குலத்தை மீட்பதற்காக, யுக்தியாக அதாவது பாதையாக பயன்படுத்துகிறார். சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை பற்றிய செய்தியே சிறப்பு செய்தி என 1 கொரிந்தியர்: 15- ஆம் அதிகாரத்தில் பரிசுத்த பவுல் குறிப்பிடுகிறார். ஆகவே இயேசுவின் சிலுவைப்பாதை மனித மீட்புக்கு வழி நடத்தும் செயல்பாடு சார்ந்த ஈடு பாடாகும். பரிசுத்த பவுல் அடிகளார் இதற்கு நானே சாட்சி என்று குறிப்பிடுகிறார். மேலும் சிலுவை செய்தி என்பது அபூர்வமான செய்தி மட்டுமல்ல அதிர்ச்சியான செய்தியாகும் ( A Shocking message) ஏதேன் தோட்டத்தில் ஒரு மரத்தினால் மனுக்குலம் உறவில் பிரிவையும் முடிவையும் பெற்றுக் கொண்டது. இதனால் மனுக்குலம் கடவுள் பார்வையிலிருந்து தன்னைத் தானே மறைத்துக் கொண்டது. ஏதேன் தோட்டத்தில் மரத்தைத்தொட்டதினால், கனியை புசித்ததினால் பிளவு, பிரிவு, பிரச்சனை வந்தது. இன்று சிலுவையின் மரம் கொல்கதா தோட்டத்தில் இணைப்பையும், பிணைப்பையும் வெளிப்படுத்தியிருக்கிறது. அந்த மரம் மனுக்குலத்தை துரத்தியது, இந்த சிலுவை மரம் துணையாகவும், தூணாகவும் துவண்டு போனவர்களை துணை நின்று வழிநடத்துகிறது. வழிவழியாக சிலுவையில் மாற்றுருவம் பெற்று மனுக்குலத்தை மீட்பின் பாதையில் வழிநடத்துகிறது. ஆகவேதான் குற்றமற்ற இயேசு குற்றத்தை ஏற்று தண்டனையை ஏற்று மீட்பை சிலுவைப் பாதையை யுக்தியாகக் கொண்டு மனுக்குலத்திற்கு மீட்பை தந்துள்ளார்.

## 02 சிலுவையில் முக்தி / The Purposes of the Cross

சிலுவையின் மூலமாக மீட்பு வழங்க இயேசு தன்னையே அர்ப்பணித்தார். மனுக்குலம் முக்தி பெற வேண்டும்; முன்னேற்றம் அடைய வேண்டும்; முழுமை பெற வேண்டும் என்பதற்காக இயேசு கிறிஸ்து சிலுவையில் பாடுகளை ஏற்றுக்கொண்டார். சிலுவையில் இயேசு கிறிஸ்து பாடுகளை ஏற்றதால் உறவு, முறிவு, பிரிவு, தடை, தடுப்பு சுவர், தடைக்கற்கள் அப்புறப்படுத்தப்பட்டிருக்கிறது. அர்த்தமுள்ள வாழ்வும், அடையாளமும் மனுக்குலத்தின் மீட்பிற்கு வழங்கிய சின்னம்தான் சிலுவை. பாதிப்பின்றி மீட்பு இல்லை; இரத்தம் சிந்துதல் இல்லாமல் மீட்பு இல்லை. மீட்பினை பகிரவே இயேசு கிறிஸ்து மனிதனாக பிறந்து, வளர்ந்து இறப்பையும் சந்தித்து சிலுவையில் இரட்சிப்பின் கனியை மனுக்குலத்திற்கு பெற்றுத் தந்துள்ளார். சிலுவைப்பாதை என்பது பாவத்தின் பாதைக்கு மாற்றுப்பாதை என்று கூறலாம். இன்று ஒரு மனிதன் முக்தி அடைய வேண்டுமென்றால் அல்லது மாற்றம் பெற வேண்டும் என்றால், வேற்றுப் பாதையை தேடவேண்டிய அவசியமில்லை, மாறாக சிலுவைப் பாதையையும், சிலுவை நாதராம் இயேசுவை சிகரமாக ஏற்றுக்கொள்ளும்போது முக்தி நிலையை பெற்றுக்கொள்ளலாம். ஏனென்றால் இயேசு கிறிஸ்து சிலுவையில் சாத்தானை, மரணத்தை முறியடித்தார் (1கொரிந்தியர்: 15:55,56) சிலுவையில் இயேசு கிறிஸ்து மொழிந்த மொழிகளில் முடிந்தது என்ற வார்த்தை சிலுவையின் வார்த்தையாக இருந்தாலும் அது நற்செய்தி வார்த்தை ஆகும். மனுக்குலத்தின் கட்டுகள், ஏற்றத்தாழ்வுகள், அடிமைத்தனம் போன்றவற்றிலிருந்து மனுக்குலத்தை விடுதலைக்கு வழி நடத்தும் முக்திநிலை பாதையே சிலுவை பாதை ஆகும். சிலுவை என்பது சீர்திருத்தத்தை (Reform) விடுதலையை பரலோக ராஜ்ஜியத்தின் தகவல்களை மிகவும் தெளிவுபடுத்துகிறது.

## 03 சிலுவையின் சக்தி / The Power of the Cross

சிலுவை ஏன் முக்கியமானது எனில் மனுக்குலத்திற்கு பிரதிநிதியாக இயேசு கிறிஸ்து தன்னையே பிரதான பலியாக தன்னை ஒப்படைத்தார். அவர் பலியாவதற்கு வழியாக இருந்தவர்கள் மனுக்குலம் தான் ஆனால் இயேசுவோ சிலுவையில் தொங்கிய வண்ணமாக அனைத்துலக மக்களின் மீட்புக்காக பரிந்துரை செய்கிறார். தந்தையாகிய கடவுளிடம் பூமியும் அதின் நிறைவும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது என்று சங்கீதக்காரன் கூறின வார்த்தை(சங்கீதம்:24:1)

இங்கு மறுபடியும் உறுதி செய்யப்படுகிறது. சொல்லும் செயலிலும் இணைந்து வெளிப்படுத்தப்படுகின்றன நிகழ்வாக சிலுவை வல்லமை உள்ளது காணப்படுகிறது. பாவ சங்கிலி தொடர் அறுக்கப்படுகிறது. ஆண்டவரின் பாசம் மலர்கிறது. வேஷம், தோஷம், நாசம் கலைந்தெறியப்படுகிறது. நரகம் அழிக்கப்பட்டது. பரலோக ராஜ்ஜியம் மலர்கிறது. பல இடங்களில் சிதறி இருந்த மக்கள் இயேசுவின் சிலுவையை நோக்கி பார்க்கும்போது ஏதேன் தோட்டத்தில் இழந்த இறையரசு(Paradise lost) கொல்கதா தோட்டத்தில் இறையரசு திரும்பப் பெறப்படுகிறது ( Paradise Regained) சிலுவை சின்னமாக பார்க்கும்போது மனுக்குலத்தை மனு குலமாக மறு உருவாக்கத்திற்கு வழிநடத்துகிறது. சிலுவையை நோக்கிப் பார்த்தால் மனுக்குலம் தான் இழந்த தனித்தன்மைகளை திரும்ப பெற்றுக் கொள்ள முடியும். சிலுவையை பின்பற்றினால் சிலுவை நாதர் இயேசு கிறிஸ்துவின் தனித்தன்மைகளை நாமும் வாழ்க்கையில் கடைப்பிடிக்க முடியும். ஆகவேதான் பரிசுத்த பவுல் கூறுகிறார் கிறிஸ்துவுக்குள்ளாக எந்த வேறுபாடும் இல்லை என்று.,(கலாத்தியர்: 3:28)

## 04 சிலுவை மீட்பின் அடையாளம்.

மீட்பிற்கு வழிநடத்துகின்ற நிகழ்வு சார்ந்த ஒன்று. சிலுவையில் இயேசு கிறிஸ்துவின் சிலுவை பாடுகள் சார்ந்த அதன் யுக்தியையும், சிலுவையை தங்கள் சொந்த அர்ப்பணிப்பின் சின்னமாக ஏற்று அர்ப்பணிப்புடன் வாழ்பவர்கள் முக்தி நிலையையும் அடையலாம் என உறுதியாய் நம்புவதற்கு அழைக்கப்படுகிறோம். சிலுவை இன்றைக்கும் சாதாரணமான சின்னமல்ல மனுக்குலத்தை புனித பெற வழிநடத்துகின்றன சின்னம் ஆகும். அந்த சிலுவை தான் நம்மையும் மனம் திரும்புவதற்கு அழைக்கின்றது. இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தை உள்ளான உணர்வோடு புரிந்துகொண்டு நம்மையும் இந்த லெந்து காலங்களில் அர்ப்பணிக்க அழைக்கப்படுகிறோம்.


ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

ஆண்டவரின் அருட்பணியில் உங்கள் ஆயர்
Rev.S.P.Baskar



# விசுவாசிகளின் தாய்

# சாராள்



ஆதி 12:1-4 ஆதி 20:1-18

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! உங்கள் அனைவருக்கும் ஸ்தோத்திரம்...!!

முன்னுரை:
சாராய் என்றாள் "எனது இளவரசி" என்று பொருள், கடவுள் இதை சாராள் என்று மாற்றினார். இதற்கு ஜனத்திற்கும் இராஜாக்களுக்கும் தாய் என்று பொருள். கடவுளை விசுவாசிக்கின்ற யாவரும் "சாராளின் பிள்ளைகள்" என அழைக்கப்படுகின்றார்கள்.

..... உத்தம விசுவாசத்துடன் தேவனைப்பின்பற்றி, சாந்தமும், அமைதலுமுள்ள ஆவியால் நம்மை அலங்கரித்து நமது சொந்த புருஷருக்குக் கீழ் படித்திருந்தால் நாமும் சாராளின் பிள்ளைகளாய் இருப்போம் (1பேதுரு 3:3-6)

**சாராளின் அழைப்பு:** கடவுளை பின்பற்றும் படியான அழைப்பு சாராளுக்கு நேரடியாக வரவில்லை, அவரது கணவனான ஆபிரகாமுக்கு கடவுள் தரிசனமாகி உனக்குள்ள எல்லாவற்றையும் விட்டு விட்டு தம்மை பின்பற்றும் படியாகவும், அப்பொழுது அவர்களது சந்ததியையும் ஆசீர்வதிப்பதாகவும் கூறினார். சாராளும் ஆபிரகாமைப்பின்தொடர்ந்தார். அப்பொழுது ஆபிரகாமுக்கு 75 வயதும், சாராரளுக்கு 65 வயதும் இருந்தது. குடும்பம் என்பது ஒன்றாக இருக்க வேண்டும் என்பதற்கு இது ஒரு அடையாளம் (ஆதி:12:4) கடவுளுடைய திட்டத்தில் பங்கெடுக்கும் சிலாக்கியம் கொடுக்கப்படும் போது குடும்பத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோணத்தில் செயல்பட ஆண்டவர் அழைக்கவில்லை, இணைந்து செயல்படவும் ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளவும் அழைக்கின்றார்...

**சாராரளின் விசுவாச வாழ்வு:** தான் அறியாத தேசத்துக்குப் போக ஆபிரகாம் புறப்பட்டபோது விசுவாசத்துடன் அவரை பின் தொடர்ந்தவர் சாராள். இது கடவுளின் பெயரில் வைத்த விசுவாசத்தைக் காட்டுகிறது. ஒவ்வொரு முறையும் அவர்கள் இடத்தை மாற்றும்போது கூடாரத்தை எடுத்துக்கொண்டு செல்லும்போது சாராள் ஒரு

போதும் முறு முறுக்கவில்லை, அவரது மனது கொஞ்சம் கூட கஷ்டப்பட வில்லை, புதிய அனுபவத்தை பெற தன்னை அர்ப்பணிக்கின்றார். அத்துடன் முறு முறுகாமல் ஆபிரகாமுடன் பின் சென்றதுடன் ஆபிரகாமின் விசுவாச வாழ்விற்கு சாராள் உதவினார். ஆபிரகாமிற்கு விருந்தோம்பல் செய்து ஓய்வு இல்லாமல் உதவி செய்தார். குழந்தை இல்லாத நிலையில் இருந்தபோது 90 வயதில் தன்னுடைய கர்ப்பம் செத்துப்போனதை எண்ணாமல் விசுவாசத்தினால் பெலனடைந்து பிள்ளை பெற்றார். சரீரம் செத்தவளென்று என்னபட்ட ஒருவளாலே வானத்திலுள்ள நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை யிலுள்ள மணலைப் போலவும் மிகுதியான ஜனங்கள் பிறந்தார்கள். அதற்கு காரணம் வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர் என்றெண்ணி வயது சென்றவராயிருந்தும் விசுவாசத்தினாலே கர்ப்பந்தரிக்க பெலனடைந்து சாராள் பிள்ளைப்பெற்றார். (எபி:11:12) இதுவே விசுவாச வாழ்வின் அடையாளமாகும்.....

**சாராளின் முன்மாதிரியான வாழ்வு:** மரியாதையுடன் கூடிய கீழ்ப்படிதல்-பயபக்தி: குடும்ப உறவைப் பற்றி பவுல் கூறும்போது மனைவிகளே! ஆண்டவருக்குள் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்த புருஷனுக்குக் கீழ்ப்படியுங்கள், புருஷனிடத்தில் பய பக்தியாயிருங்கள் என்று கூறினார். (எபேசியர் 5:23,33) சாராள் ஆபிரகாமுக்குக் கீழ்ப்படிந்து தன்னை அலங்கரித்தார் என்று பேதுரு கூறுகிறார். (1பேதுரு: 3:5,6) சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்றார், இது சாராளின் பயபக்தி காண்பிக்கின்றது. எனவே சாராள் மரியாதையுடன், பயபக்தியுடன், கீழ்ப்படிந்து ஆண்டவரின் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டார்....

**சாராள் ஒரு கடின உழைப்பாளி:** திடீர் விருந்தாளிகளை வரவேற்க அவரின் முகம் ஒருநாளும் சுளிக்கவில்லை, மூன்று படி மாவினால் அப்பம் சுட வெயில், உஷ்ணம் என்று தள்ளிப் போட வில்லை, சாக்கு போக்கு சொல்லவில்லை, மற்றும் எத்தனை முறை இடம் மாறினாலும், கூடாரம் மாற்றினாலும் சலித்துக் கொள்ள வில்லை, ஆபிரகாமுக்கு உதவியாக இருந்தார், கடவுளின் திட்டத்திற்காக தன்னை முழுவதுமாக அற்பணித்து உழைத்தார்.....

இன்றைக்கு நாமும் சாராளைப்போல கடவுளின் திட்டத்திற்கு, திருப்பணிக்கு நம்மை அர்ப்பணித்து வாழ அழைக்கப்படுகின்றோம்....

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

இறைப்பணியில் உங்கள் ஆயரம்மா....
**Mrs. E. Nancy Baskar**

# செயலர் மடல்



கிறிஸ்துவுக்குள் எனதருமை உடன் விசுவாசிகளே..

இயேசு கிறிஸ்துவின் இணையில்லா நாமத்தினாலே உங்கள் யாவருக்கும் சபை குழுவின் சார்பாக அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த லெந்து நாட்களில் நம்முடைய விசுவாசத்தை வெளிப்படுத்தும் வண்ணம், ஆவிக்குரிய எல்லா ஒழுங்குகளையும் தவறாமல், உறுதியோடு கடைபிடிக்க கர்த்தர் அருள்பபுரிவாராக.

கடந்த மாதத்தில் திருச்சபையின் அறுப்பின் பண்டிகையை சிறப்பாக நடத்த தேவன் நமக்கு கிருபை கூர்ந்தார். ஒன்றிணைந்து ஜெபத்தாலும் தங்களுடைய விலைமதிக்கமுடியாத நேரத்தை கொடுத்ததும் செயல்பட்ட அனைவருக்கும் குறிப்பாக போதகருக்கும், அறுப்பின் பண்டிகையின் கன்வீனராக செயல்பட்ட திருடி.ராஜவேல் அவர்களுக்கும், அன்பின் வாழ்த்துக்களையும் நன்றியும் உரித்தாக்குகிறேன். **CHAMPS FOR CHRIST** போட்டிகளை சிறப்பாக பொறுப்புடன் முன்னின்று நடத்தின திரு மெல்பின் பால் திரு. ரவீந்திரா, மற்றும் விடியோ எடிடிங் செய்துதந்த திரு. சந்தோஷ் குமார் அவர்களுக்கும், பரிசுகளை ஸ்பான்சர் செய்த ஒவ்வொரு திருச்சபையின் அங்கத்தினர்களுக்கும் எனது நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரும் நாட்களில் செயல்படுத்த திட்டமிடப் பட்டிருக்கும் ஒவ்வொரு ஆராதனைகளுக்காகவும், விடுமுறை வேதகம வகுப்பு, பெரிய வெள்ளி ஆராதனை, மற்றும் திருச்சபையின் ஊழியங்களுக்காக அனைவரும் ஒருமனப்பட்டு ஜெபிப்போம். இந்த இக்கட்டான சூழ்நிலையிலும் திருச்சபையின் தேவைகளை அறிந்து, நேசித்து தாங்குகின்ற ஒவ்வொருவருக்காகவும் நான் தேவனைத் துதிக்கிறேன். இன்னும் அதிக உற்சாகத்தோடு அனைத்து ஆலய ஆராதனைகளில் பங்கு பெற்று தேவாசீர்வாதம் பெற்று செல்ல அன்புடன் அழைக்கிறேன்.

நமதாவிக்குரிய வாழ்க்கையில் பல உருமாற்றங்களை கொண்டு வருகிற இந்த லெந்து காலத்தில் தேவனை நெருங்கி ஜீவிக்க, தவறான வாழ்க்கையை முறையை வெறுத்தொதிக்கிவிட்டு, கிறிஸ்துவுக்குள் ஒரு தவ வாழ்க்கையை இந்த புதிய மாதத்தில் மேற்கொண்டு ஆவிக்குரிய வாழ்வில் உருமாற்றம் பெற முயற்சி செய்வோம்.

இப்படிக்கு

அன்புடன் கிறிஸ்துவின் பணியில்

சுரேஷ் ராஜன்



# சவுலே.. சவுலே...

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் ஸ்தோத்திரங்களை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாதத்தின் எல்லா ஆசிர்வத்தோடே கர்த்தர் நம்மை வழிநடத்துவராக.

இப்போதும் கூட ஆண்டவர் நம்மை நோக்கி கூப்பிடுகிறார் சவுலே, சவுலே ஏன் என்னை துன்பப்படுத்துகிறாய்..? என்று இந்த நாளிலே நாம் நம்மை சோதித்து பார்ப்போம். இயேசுவை நாம் எத்தனை முறை துன்பப்படுத்தி இருக்கிறோம் என்று.. வார்தைனாலோ அல்லது கரங்களினாலோ, சிந்தைனாலோ அல்லது இருதயத்தினாலோ ஆண்டவரை நாம் துன்ப படுத்தியிருக்கிறோம். நாம் கூட நினைத்து பார்க்கலாம் நான் ஆண்டவரை எப்போது துன்பப்படுத்தியிருக்கிறேன் என்று; சவுல் இயேசுகிஸ்துவை துன்பப்படுத்துவில்லை மாறாக கிருஸ்த்துவர்களை துன்பபடுத்தினவன். ஆனால் இயேசு ஏன் என்னை துன்பப்படுகிறாய் என்று கேட்கிறார். சவுலை போலவே நாமும்கூட அநேகரை துன்பப்படுத்தி இருக்கலாம் ஆண்டவரால் படைக்கப்பட்ட எல்லோரும் அவருடைய ஆத்துமாக்கள் தான். அது யாராக இருந்தாலும் சரி நாம் யாரை துன்பப்படுத்தி இருக்கிறோம் என்று நம்முடைய இருதயத்தை கேட்டுப்பார்ப்போம். ஊழியரையா அல்லது உடன் பணியாற்றுகிறவர்களா, அல்லது உடன் நண்பர்களா அல்லது உடன் பிறந்தவர்களா நீங்கள் யாரை துன்பப்படுத்தி இருந்தாலும்; அது இயேசுவை துன்பப்படுத்துகின்றது போலதான். ஆகவே தான் இயேசு சவுலை பார்த்து சொல்லுகிறார் (அப் 9:4'ல் நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே என்பதாய், எனக்கு அன்பான கர்த்தருடைய பிள்ளைகளே,சவுலை போலவே நாம் யாரையாகிலும் துன்பப்படுத்தியிருந்தாலும் இயேசுவைதான் துன்படுத்துகிறோம்.

நாம் யாரையும் குற்றப்படுத்துவோ அல்லது குறை சொல்லவோ தகுதியானவர்கள் அல்ல. இயேசு ஒருவரே நீதியுள்ள நியாதிபதி; அவரே நீதி செய்கிற தேவன். அவரவருக்கு தக்க பலனை அவரே தருகிறார். நன்மை செய்தால் நன்மை, தீமை செய்தால் தீமை என்று, நாம் ஒருவரையும் குற்றபடுத்திக்கிறவர்கள் அல்ல காரணம் நாம் அனைவரும் மண்ணினால் உண்டாக்கப்பட்ட மனிதர்கள். ஆகவே தான் சவுலாகிய பவுல் சொல்லுகிறார் கலத்தியர் 3:28-ல் யூதனென்றும் இல்லை கிரெக்கென்றும் இல்லை..,நாம் எல்லோரும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாய் இருக்கிறோம் கிருஸ்த்து ஒருவரே நமக்கு தலையானவர் எனக்கன்பானவர்களே இனி அடிமைகளில்லை இயேசுகிறிஸ்துவின் பிள்ளைகள் (காலத்தியர் :4:7) நாம் மனம் மாறுவோம் மற்றவர்களை மனம் மாற்றுவோம் மாற்றம் முதலில் நம்மிடத்தில் இருந்து உருவாக்குவோம் கர்த்தர் தாமே நம்மையும், நம்முடைய குடும்பத்தையும் ஆசிர்வதிப்பாராக. ஆமென்.

## ஏன் என்னை துன்பப்படுத்துகிறாய்...?

Mr. Ashok Kumar / Men's Fellowship



# இந்த சிங்கம் கடிக்காது...!

(தானியேல் 6:13-28)

**"சிங்கங்கள் என்னைச் சேதப்படுத்தாதபடிக்குத் தேவன் தம்முடைய தூதனை அனுப்பி, அவைகளின் வாயைக் கட்டிப்போட்டார். அதேனென்றால் அவருக்கு முன்பாக நான் குற்றமற்றவனாய்க் காணப்பட்டேன். ராஜாவாகிய உமக்கு முன்பாகவும் நான் நீதிகேடு செய்ததில்லை என்றான்." தானியேல் 6:22**

தேவனுடைய தாசன் தானியேல், சிங்கக் கெபிக்குள் போடப்பட்டான். ஆனால் கொடிய சிங்கங்களால் அவனுக்கு எந்த சேதமும் ஏற்படவில்லை. அவனை சேதப்படுத்தாதபடி சிங்கங்களின் வாயை தேவன் கட்டியிருந்தார்

சிங்கக் கெபிக்குள் தள்ளபடுவதை தேவன் தடுக்கவில்லை. ஏனென்றால் உண்மையான தேவனை உறுதியாக பற்றிக்கொண்டிருக்கும் ஒரு மனிதனை எந்த கொடிய சிங்கமும் சேதப்படுத்த இயலாது என்பதை அந்த தேசமே அறிய வேண்டும் என்பது தேவனின் விருப்பமாயிருந்தது

**யார் இந்த சிங்கங்கள்:** நமக்கு ஏற்படுகின்ற சோதனைகள், ஏமாற்றங்கள், தோல்விகள், வறுமைகள், துயரங்கள், இக்காலத்தில் ஏற்பட்டுள்ள கொள்ளை நோய்கள், வியாதிகள், சமாதான குறைவுகள், வேலையில்லா திண்டாட்டம். இப்படி பலவிதமான சிங்கங்களை நாம் நாள்தோறும் சந்திக்கிறோம்.

**சிங்கங்கள் ஏன் கடிக்கின்றது:** நமக்குள் ஏற்படுகின்ற பாவ வாழ்க்கையில் நாம் சிக்குண்டு இயேசுவை தேடாமல் இருக்கும் போது சாத்தான் நமக்கு இப்படிப்பட்ட அனுபவங்களை ஏற்படுத்துகிறான், சாத்தான்.

**சிங்கக் கெபியிலிருந்து எப்படி மீள்வது:** தானியேலை போல நாம் இயேசு கிறித்துவிடம் தினமும் ஜெபிக்க வேண்டும். விசுவாசம், நம்பிக்கை, அன்பு இருக்க வேண்டும். உபவாசம், இவ்வகை பிசாசு உபவாசத்தினாலும், ஜெபத்தினாலும் போகும். எனவே நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டு மன்னிப்பு பெற்று ஆண்டவராகிய இயேசுவிடம் இரக்கத்தை பெற்றுக்கொள்ள முயற்சி செய்ய வேண்டும். நம்முடைய பெலவீனத்திலே

கர்த்தருடைய பெலன் பூரணமாய் விளங்கும். சோதிக்கப்படுகிற நமக்கு அவர் பூரண கிருபை அளித்து நம்மை பாதுகாக்கிறார்.

வாழ்க்கைப்பகுதிகளில் நம்மைப் பயமுறுத்தும் பலவிதச்சிங்கங்களை கண்டு கலங்கி தவிக்கலாம். கர்த்தர் மேல் நம் பார்வையை வைத்து அவரோடுயுள்ள ஐக்கிய நிலைகளை அதிகம் தேடும் போது நாம் காக்கப்படுகிறோம்.

தேவன் மேல் வைக்க வேண்டிய பார்வையை சிங்கங்கள் மேல் வைக்கும் போது அவைகளின் கர்ஞனை அதிகமாகும்.

எனவே தேவன் மேல் நம் பார்வையை வைத்து பிரச்சனைகளை கண்டு கலங்காமல் கர்த்தரை நம்பியிருங்கள். இந்த சிங்கங்கள் உங்களை கடிக்காது. தோல்வி அடையும் போதெல்லாம் பிறரைக் காரணம் காட்டினால் நீ தோல்வியடைய பலர் வந்து கொண்டிருப்பார்கள்.

**Article by:**
**Mrs. Angelin Bhaskar and Family**

IF DANIEL CAN **TRUST GOD** IN
THE LION'S DEN,
THEN YOU CAN
**TRUST GOD**
IN YOUR WORRIES AND STRESS






**"ஆயக்காரன் தூரத்திலே நின்று தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல் தன் மார்பிலே அடித்துக்கொண்டு: தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான்" (லூக்கா 18:13).**

நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் பாவ அறிக்கை செய்கிற வழக்கமுள்ளவர்களாக இருந்தால் மட்டுமே ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர முடியும். பாவ அறிக்கை செய்யாதவர்களின் வாழ்க்கையில் அவர்கள் அநேக வேளைகளில் தங்கள் பாவ பழக்கவழக்கங்களில் எதாவது ஒரு விதத்தில் மாட்டிக்கொண்டிருக்கிறவர்களாகவே காணப்படுவார்கள். அவர்களுக்கு மெய்யான உணர்வு என்பது இருக்காது.

இன்னும் சிலர் நான் என் ஆவிக்குரிய வாழ்க்கையில் ஆண்டவரை அநேக ஆண்டுகளாக அறிந்திருக்கிறேன், ஆகவே எனக்கு எல்லாம் தெரியும் என்ற எண்ணம் அவர்களைத் தவறாய் வழிநடத்திவிடும். ஆகவே நான் இவ்விதமாக ஒரு அறிக்கையின் ஜெபத்தை செய்ய வேண்டிய அவசியமில்லை என்று எண்ணுகிற மனநிலையுள்ள அநேக விசுவாசிகளை நாம் இன்று பார்க்கிறோம். ஆனால் ஆவிக்குரிய முதிர்ச்சியுள்ள தேவ மனிதன் அல்லது ஆவிக்குரிய வாழ்க்கையில் தொடர்ந்து வளர்ந்து வருகின்ற மனிதனின் வாழ்க்கையில் ஆவிக்குரிய உணர்வு அதிகமாக இருக்கும்.

பரிசுத்த ஆவியானவர் அவர்களின் வாழ்க்கையில் எந்தெந்தப் பகுதிகளில் அவர்கள் தங்களைச் சரிப்படுத்த வேண்டும் என்று உணர்த்தும்போது அவர்கள் அதை உணர்ந்து கொண்டு தங்களைத் தாழ்த்தி தேவனுக்கு முன்பாக ஜெபிப்பார்கள். உதாரணமாக விசுவாசிகள் என்று சொல்லப்படுகிறவர்களின் வாழ்க்கையில் பெருமை சாதாரணமாக வெளிப்படும். ஆனால் அவர்கள் அதைக் குறித்து உணர்கிறவர்களாய் இருக்க மாட்டார்கள். ஏனென்றால் பரிசுத்த ஆவியானவரின் உணர்த்துதலின் உணர்வு அவர்களில் இருப்பதில்லை. பரிசுத்த ஆவியானவர் அதைக் குறித்தும் உணர்த்தும் போதும் அவர்கள் அதை அற்பமாய் எண்ணி அலட்சியப்படுத்துவதும் உண்டு. இது ஆண்டவரை துக்கப்படுத்துகிறது என்ற மனவருத்தம் இல்லாதவர்களாய் வாழுவார்கள்.

பாவ அறிக்கை செய்கிற ஒரு வாழ்க்கையில் இன்னொரு முக்கியமான காரியம் என்னவென்றால் ஒரு நல்ல ஆவிக்குரிய முதிர்ச்சியுள்ள வளர்ச்சியைப் அவர்களில் பார்க்க முடியும். கிறிஸ்துவைப் போல வளருகிறவர்களாக இருக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்துவார்கள். நம்முடைய வாழ்க்கையில் இடைவிடாமல் ஜெபிப்பதற்கு இவ்விதமான காரியங்கள் அதிக உதவியாய் இருக்கும்.



# Sharing is Caring

Sharing's Caring

YOUTH FELLOWSHIP

**Sharing makes you more significant than you are.**

**"The More You Give; the More You Receive".**

## WHAT?

## COLLECTION OF DRESSES, TOYS, FOOD STUFFS ELECTRONICS

Shirts, T-shirts, sarees, kids dress, bedsheet, winter clothes, Comforter, pillows etc.

Rice, Dhal, sugar, oil, tea dust, flour, Noodle packets, Packed croissants, Cooking vessels,

Torch rechargeable, iron box, electrical cookers, Fan, warmer, Shoes, toys, brush, toothpaste, first aid kit, creep bandage

## HOW?

## WHEN?

COLLECTION BOX & REGISTER BOOK WILL BE PLACED IN PASORNAGE

COLLECTION FROM DATE
1 FEB 21
TO
25 MAR 21



**FOOD STUFFS, ELECTRONICS WILL BE DISTRIBUTED TO THE NEEDY WHO RESIDES IN UAE. EXCESS DRESS & TOYS DEPENDING UPON THE WEIGHT; WILL BE SENT TO INDIA BY CARGO TO ORPHANAGE/OLD AGE HOMES**

# வேதாகம களஞ்சியம்

1. தாவீது என்ற பெயர் 1118 தடவைகள்
2. மோசே என்ற பெயர் 740 தடவைகள்
3. ஆரோன் என்ற பெயர் 339 தடவைகள்
4. சவுல் என்ற பெயர் 338 தடவைகள்
5. ஆபிரகாம் என்ற பெயர் 306 தடவைகள்
6. சாலொமோன் என்ற பெயர் 295 தடவைகள்
7. யாக்கோபு என்ற பெயர் 270 தடவைகள்
8. யோசேப்பு என்ற பெயர் 208 தடவைகள்
9. யோசுவா என்ற பெயர் 197 தடவைகள்
10. பவுல் என்ற பெயர் 185 தடவைகள்
11. பேதுரு என்ற பெயர் 166 தடவைகள்
12. யோபு என்ற பெயர் 137 தடவைகள்
13. எரேமியா என்ற பெயர் 136 தடவைகள்
14. சாமுவேல் என்ற பெயர் 135 தடவைகள்
15. ஈசாக்கு என்ற பெயர் 127 தடவைகள்

நம்முடைய கர்த்தராகிய **இயேசு** என்னும் நாமமோ **973 தடவைகள்** குறிப்பிடப்பட்டுள்ளன.




# How it Works




**STEP 1** DONATE DAILY IN THIS BOX

**STEP 2** COLLECT, IDENTIFY & SEND

**STEP 3** EDUCATE & CHANGE CHILD'S LIFE




STARTING FROM NEXT ACADEMIC YEAR; THE CBS MINISTRY KIDS TOGETHER WILL SUPPORT, EDUCATE AND CHANGE ONE KID'S LIFE.

COIN SAVNG BOX WILL BE GIVEN TO ALL KIDS AND EACH KID NEED TO DROP ONE DIRHAM/DAY; AND THAT WILL BE COLLECTED FROM CBS KID'S HOUSE BY OUR CHURCH VOLUNTEER AND SENT TO THE KID FOR HER EDUCATION.

# KIDS COLOURING

Kinder Beginn



YOUR NAME HERE

# God Made a Promise to Abraham
# Coded Words

Each number stands for a letter of the alphabet. Write the correct letter in the blank to find the coded words and phrase.

**Code key**

| | | |
|---|---|---|
| A 1 | J 10 | S 19 |
| B 2 | K 11 | T 20 |
| C 3 | L 12 | U 21 |
| D 4 | M 13 | V 22 |
| E 5 | N 14 | W 23 |
| F 6 | O 15 | X 24 |
| G 7 | P 16 | Y 25 |
| H 8 | Q 17 | Z 26 |
| I 9 | R 18 | |

___ ___ ___ ___ ___
19 20 1 18 19

___ ___ ___ ___ ___ ___
6 1 20 8 5 18

___ ___ ___ ___ ___ ___
19 8 9 5 12 4

___ ___ ___ ___ ___ ___ ___ ___ ___
15 6 6 19 16 18 9 14 7


___ ___ ___ ___ ___ ___ ___ ___
3 15 22 5 14 1 14 20

**PHRASE:** ___ ___ ___ ___ ___ ___ ___
1 2 18 1 8 1 13

___ ___ ___ ___ ___ ___ ___ ___ ___ ___ ___ .
2 5 12 9 5 22 5 4 7 15 4



# THE LAST SUPPER




**ACROSS**

2. The holiday that Jesus and His friends celebrated.
4. A name for the friends of Jesus
7. The number of Jesus' friends
9. The city where Jesus and His friends ate the meal.
10. Jesus said it represented His blood.

**DOWN**

1. ___________ of sins
3. Something to drink from
5. Not morning
6. Jesus said that this man would betray Him.
8. Jesus said it represented His body.




5
4
3
2
1

1. Chapter one demonstrates that Jesus is better than what?
   Angels | Moses | The Father | Abraham | Creation

2. Who said to Jesus, "Your throne, O God, is forever and ever"?
   Jesus | The Apostle Thomas | God the Father | Paul | The angels

3. How did our universe come about into existence?
   The angels formed it | Hebrews doesn't say | Jesus made it. | Long periods of time | It has always existed.

4. What does it mean to *give the more earnest heed* to what we've heard, lest we forget?
   Pay careful attention | Give interest money | Pray to Jesus | Make sacrifices | To love righteousness.

5. Whom did God inspire as the human author of Hebrews?
   Paul | Luke | Apollos | Unknown | Priscilla

6. How did God validate the message that the Apostles were preaching?
   Angels | Jeremiah | Wonders and Miracles | Changing seasons | Governmental approval

7. Jesus is not embarrassed to call believers what?
   Brothers | Angels | Sinners | Devils | Servants

8. What does it mean that Jesus *took part of flesh and blood*?
   He became fully human | He knows what is inside of us | He was a scientist | He actually was an angel | We don't know.

9. "He who built the house has more honor than the house" is used to demonstrate what?
   Jesus is better than Moses | Moses was better than Jesus | Jesus and Moses are co-workers | Moses was faithful | Jesus was faithful.

10. What do you need to do to prevent having a hard heart toward God?
   Believe God | Go to church | Watch clean TV shows | Be nice to people | Read the Bible.

11. We are encouraged to be afraid of missing out on what?
   God's promise | Nothing | Brotherly love | Joshua's leading | David's writings

12. Why can Jesus help us when we are being tempted?
   He was tempted Himself | He knows everything | He love everybody | He taught great things | He rose from the dead



13. Who is the High Priest of the Church?
   Jesus | The Pope | The Pastor | Caiaphas | Peter

14. In chapter 5, what is a baby drinking milk a picture of?
   Spiritual immaturity | Healthy desire | Skilfully using the Bible Teachers | All believers


15. Who is *Jesus* in Hebrews 4:8, "*If Jesus had given them rest...*"
   Joshua of the Old Testament | The Son of God | High Priest | The Angel of the Lord | Apostle

# February

## Congratulations

You did it!

| Kidz Colouring | Word Search | Bugs in Bible | UnScram Bable | Bible Quiz |
|---|---|---|---|---|
| HAZEL HARTLYN | JOHAN SANJO | JOHAN SANJO | JASON ERIC | ROSHAN |
| CRASSLIN DEVONA | JASON ERIC | JASON ERIC | ERIC AARON | SHELBINO |
| REAGAN SHAN | JEREMIAH | JONATHAN | JONATHAN | JASON ERIC |
| CHRIS GABRIEL | JONATHAN | | | |
| JANIA PRENI | | | | |
| JOHAN SANJO | | | | |
| JEMIMA ASHNI | | | | |






ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள்,
அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna;
and do please send to us on or before 20th of every month,
in the following format.

***Email Subject:*** ***Your name / Quiz type / Month-Year***

***To Church Email:*** ***csitcalain@gmail.com***

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

*You can also download our Monthly Manna by visiting our Church Website*

***http://www.csitamilparishalain.org***

*சர்ச் இணையத்தளத்தை பயன்படுத்தி மாதாந்திர மன்னாவை நீங்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.*

# Happy Birthday MARCH

| | |
|---|---|
| 1-Mar | Mr. David Livingston |
| 2-Mar | Mrs. Vasantha Selva Kumari W/o Mr. David raj |
| 2-Mar | Mrs. Shaly Jesie W/o Mr. Melbin Paul |
| 3-Mar | Mrs. M.Subha Alvin W/o Mr. Alvin Kumar |
| 3-Mar | Mrs. Yesubai W/o Mr. David Sorna Balan |
| 4-Mar | Mr. Libin Raj S/o Mr. Pushparaj |
| 6-Mar | Mr. Derick Gasbath Joy |
| 6-Mar | Mr. Hebin Jose George |
| 14-Mar | Mrs. Radhika Grace W/o Mr. Selva Kumar |
| 15-Mar | Mrs. Eben A.Prasad W/o Mr. Ashok Prasad |
| 16-Mar | Mrs. Bhuvaneshwari C/o Mr. Daniel Durai Singh |
| 17-Mar | Mr. D.P.Joseph Jovin S/o Mr. Deva Prakash |
| 17-Mar | Mrs. R.Jackulin Milka W/o Mr. Havin Heba |
| 19-Mar | Mr. A.S.Kannan |
| 23-Mar | Ms. Gabrilin U.S.Shasmitha D/o Mr. Ujin Raj |
| 23-Mar | Mrs. Aji Kumari W/o Mr. Robert Wilson |
| 24-Mar | Mr. Lifin Raj.P S/o Mr. Pushparaj |
| 25-Mar | Mrs. Rebecca W/o Mr. Prabhu Dinesh Kumar |
| 27-Mar | Mstr. Johan Sanjo S/o Mr. Belfer John |
| 27-Mar | Mstr. Jeroan Stanly S/o Mr. Stanly |
| 28-Mar | Ms. Eastrine Benedicta Raj S/o Mr. Saman Rajkumar |
| 28-Mar | Mstr. Ridhun Yojit S/o Mr. Sathish Kumar |
| 29-Mar | Mr. Antony Helvin Gerald |
| 30-Mar | Mr. Ajin Shah S/o Mr. Selvsiter Solomon |
| 30-Mar | Mr. D.L.Derin S/o Mr. David Livingston |
| 30-Mar | Ms. Efren Joan D/o Dr. Pradeev |
| 31-Mar | Ms. Annlin Sophia D/o Mr. Nelson Sopitha Raj |

The Lord Bless you & Keep you.

The Lord Make his face Shine on you & be gracious to you.

The Lord turn his face toward you & give you Peace.

Numbers 6: 24-26

## Happy Anniversary

7th Mar - Mr. Ujin Raj & Mrs. Sangeetha



# நான் தூதனாக வேண்டும்...!

சிட்னி பி. ஜில்

நான் தூதனாக வேண்டும்
விண் தூதரோடேயும்;
பொற் கிரீடம் தலை மேலும்
நல் வீணை கையிலும்
நான் வைத்துப் பேரானந்தம்
அடைந்து வாழுவேன்;
என் மீட்பரின் சமுகம்
நான் கண்டு களிப்பேன்.

அப்போது சோர்வதில்லை,
கண்ணீரும் சொரியேன்;
நோய், துக்கம், பாவம்,
தொல்லை, பயமும் அறியேன்;
மாசற்ற சுத்தத்தோடும்
விண் வீட்டில் தங்குவேன்;
துதிக்கும் தூதரோடும்
நான் என்றும் பாடுவேன்..

பிரகாசமுள்ள தூதர்
நான் சாகும் நேரத்தில்
என்னைச் சுமந்து போவார்
என் இயேசுவண்டையில்;
நான் பாவியாயிருந்தும்
என் மீட்பர் மன்னித்தார்;
எண்ணில்லாச் சிறியோரும்
என்னோடு வாழுவார்.


மேலான தூதரோடும்
நான் தூதன் ஆகுவேன்,
பொற் கிரீடம் தலைமேலும்
தரித்து வாழுவேன்;
என் மீட்பர்முன் ஆனந்தம்
நான் பெற்று வாழ்வதே
வாக்குக் கெட்டாத இன்பம்,
அநந்த பாக்கியம

‘அக்கா...!’ நானும் ஆண்டவருக்கு பணி செய்யும் தூதனாக மாற வேண்டும்..!” என உற்சாகத்துடன் கூச்சலிட்டாள் ஒரு அழகிய சிறுபெண். ஞாயிறு பள்ளியின் வகுப்பு நேரத்தில் தேவதூதர்களைப்பற்றி வேதபாடம் கற்றுக்கொடுத்துக்கொண்டிருந்த ஆசிரியை சிட்னி பி. ஜில் மகிழ்வுடன் சத்தமிட்ட மாணவியை பார்த்து புன்னகை செய்தாள். அவள் அமெரிக்காவின் பிலடெல்பியாவில் உள்ள டாக்டர் ஜோயல் பார்க்கர் ஆலய ஞாயிறு பள்ளி ஆசிரியையாக உத்தமமாய் ஊழியம் செய்து வந்தாள்.

சில நாட்கள் சென்ற பின் தேவதூதனாக மாற விரும்பிய அச்சிறுமி வியாதிப்பட்டு மரித்துப்போனாள். இதை சற்றும் எதிர்பாராத சிட்னியின் உள்ளத்தில்; அன்று அந்த மாணவி உற்சாகமாய் கூறிய வார்த்தைகள் மறக்க முடியாமல் துடித்துக் கொண்டே இருந்தன. அச்சிறுமியின் வாஞ்சை சிட்னியின் உள்ளத்தில் பாடலாக உருவெடுத்தது. இப்பாடலை ஞாயிறு பள்ளிப் பிள்ளைகள் பாடுவதற்கு என்று எழுதினாள். ஆனால் நாளடைவில், பெரியவர்களும் கூட விரும்பிப் பாடும் பாடலாக அது மாறியது. பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு பல நாடுகளில் இன்றும் இப்பாடல் பாடப்பட்டு வருகிறது.



## பாடல் பிறந்த கதை



# QUIZ!

## யோவான் 1-10

1. இதோ கபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்று இயேசு யாரை சொன்னார்?
2. எந்தப் பண்டிகையில், எந்த இடத்தில் இயேசு இருந்தபோது அவர் மீது விசுவாசம் வைத்தார்கள்?
3. நான் கிறிஸ்துவல்ல... அவருக்கு முன்பாக அனுப்பப்பட்டவன் என்று சொன்னது யார்?
4. இயேசு இரண்டு நாள் எங்கே தங்கினார்?
5. எத்தனை வருஷம் வியாதியாய் இருந்த மனிதன் எந்த இடத்தில் இருந்தார் இயேசு குணமாக்கினார்?
6. இயேசுவை ஜனங்கள் எங்கே தேடிக்கொண்டு வந்தார்கள்?
7. இராத்திரியில் இயேசுவிடம் வந்தது யார்?
8. யூதர்கள் ஏசுவை பார்த்து எத்தனை வயது ஆகவில்லை என்றார்கள்?
9. நாங்களும் குருடரோ என்று சொன்னது யார்?
10. இயேசு தேவாலயத்தில் உலாவிக் கொண்டிருந்த இடம் எது?

## பிப்ரவரி மாத விடை / எழுதியவர்கள்

| | | |
|---|---|---|
| 1. லூக்கா 15:4 | 2. லூக்கா 16:14 | 3. லூக்கா 17:11 |
| 4. லூக்கா 18:31 | 5. லூக்கா 19:47 | 6. லூக்கா 20:41 |
| 7. லூக்கா 21:37 | 8. லூக்கா 22:54 | 9. லூக்கா 23:27,28 |
| 10. லூக்கா 24:10 | | |

திருமதி. ஜோனீஷ் ஹெர்ஷெல், திருமதி. பிரிஸ்சில்லா ஜாண்சன், திருமதி. பிப்லின் நெல்சன், திருமதி. ஜெயின் ராஜவேல், திருமதி. ராதிகா செல்வகுமார், திரு.எம்.சி.கிறிஸ்டோபர், திருமதி. ஜமுனா ராணி, திருமதி. ஜெயந்தா ஜாண்,
திருமதி. ஜெனிபர் இம்மாக்குலேட், திரு. ஜெயபிரதீப் கிறிஸ்டோபர், திருமதி. ரோஸ்லின் பாலாஜி, திருமதி. பமீலா டேனியல், திருமதி. ஹெப்சிபாய் நேசமணி,
திருமதி. அகஸ்டா லாரன்ஸ், திருமதி. அனித்தா ராஜன்.
திருமதி. ஷெரின் டியென்ஷன் | செல்வி. ஜெரின் மேக்டலின்








EDITOR
THE PRESBYTER, CSI TAMIL PARISH, ALAIN, UNITED ARAB EMIRATES
POST BOX. 67747 | TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 343
**Email: csitcalain@gmail.com | Web: csitamilparishalain.org**

**STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY**

*Designed by: Mrs. Olivia Jeremiah*